# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS .No.103/2015

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | | திரு.மீனா | ஊர் | : | |
| க.பெ. | : | திரு. தியாகராஜன் | மாவட்டம் | : | |
| வயது | : | | தொழில் | : | |

2025ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 6ஆம் நாள் **வா.சா. 2ன்** வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54-வது விதியின் 95வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.D.சுரேந்தர் மொழிபெயர்ப்பாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

முதல் விசாரணை

சாட்சியத்தின் முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விபரங்கள் எல்லாம் நான் சொன்னவைதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 04.5.2015 தேதியிட்ட 1ஆம் வாதி 2ஆம் வாதிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் நகல் தாக்கல் செய்கிறேன். 16.8.2015 1ஆம் வாதி மற்ற வாதிகளுக்கும் பிரதிவாதிகளுக்கும் எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்படாத செட்டில்மெண்ட் பத்திரம் நகல் தாக்கல் செய்கிறேன். 19.06.2015 தேதியிட்ட 2ஆம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.4** ஆகும். 18.09.2015 தேதியிட்ட 2ஆம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.5** ஆகும். 15.09.2014 தேதியிட்ட வாதிகளும் பிரதிவாதிகளும் அனிதா என்பவருக்கு எழுதி கொடுத்த கிரய பத்திரம் நகல் தாக்கல் செய்கிறேன். 01.11.2013 தேதியிட்ட வாதிகள் பிரதிவாதிகள் முருகையன் அவர்களுக்கு எழுதி கொடுத்த கிரய பத்திரம் பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சாஆ.6** ஆகும். 01.11.2013 தேதியிட்ட வாதிகள் பிரதிவாதிகள் தவமணி அவர்களுக்கு எழுதி கொடுத்த கிரய பத்திரம் பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சாஆ.7** ஆகும். 01.11.2013 தேதியிட்ட வாதிகள் பிரதிவாதிகள் நூர்னிசா பேகம் அவர்களுக்கு எழுதி கொடுத்த கிரய பத்திரம் பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சாஆ.8** ஆகும். வில்லங்க சான்றிதழ் 01.5.2016 முதல் 17.5.2019 கணினி பதிவிறக்கம் தாக்கல் செய்கிறேன்

அது **வா.சா.ஆ.9** ஆகும். ஐஸ்வர்யம் நகல் லேயவுட் நகல் தாக்கல் செய்கிறேன். தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.

குறுக்குவிசாரணை வழக்கறிஞர் வேண்டுகோள்படி ஒத்திவைக்கப்படுகிறது.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்/- ப ,நாகராஜன்)**
**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**